# முதல் திருவந்தாதியில் மெய்யியல்

**முனைவர் கா. கண்ணகி**

**திட்ட உதவியாளர், மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.** kuzhali1408@gmil.com

19

**ஆய்வுச் சுருக்கம்**

இறைவனை அடைவதற்கு முதலாவதாக இப்பிறவியானது நீங்க வேண்டும். கர்மவினையின் பயனாகப் பிறவிகள் தொடர்ந்துகொண்டே இருந்தால் கடல்போன்று பிறவிகளும் துன்பங்களும் வந்து கொண்டே இருக்கும். இந்தப் பிறப்பென்னும் கடல் வற்றிப் போனாலே மோட்சம் கிடைக்கும். வைணவத் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கையைத் தமது முதற்பாடலிலே வைத்துசங்க நாதம் செய்கிறார் பொய்கையாழ்வார். மேலும் இந்த ஆத்மாவானது பிறவியறுத்து அவனைச் சென்று சேர்வதற்கு ஆத்ம சொரூபமாய் எப்படி வழிபட வேண்டுமென்றும் விளக்குகிறார். மேலும் பிறப்பற்றுப்போய் மோட்சம் தரும் இறைவனை விளக்கிப் பக்திக்கு வித்திட்டார் என்பதை அறியலாம்.

**திறவுச் சொற்கள்**

முதல் திருவந்தாதி. பொய்கையாழ்வார், இறைவன், பாசுரம், திருமால், ஞானம், ஐம்புலன்கள்.

**முன்னுரை**

வைணவத்தின் ஆதி கவியாகவும், விடிவெள்ளியாகவும் விளங்கியவர் பொய்கையாழ்வார். காலத்தால் முன் தோன்றிய காரணத்தால் ஆதிகவி என்னும் பெயர் பெற்றார். கவியழகு பொருந்த அந்தாதி தந்த சிறப்பால் கவிஞர் போரேறு எனும் புகழ்பெற்றார். நாட்டிலுள்ள கவிஞர்களுக்குத் தலைவராகவும் விளங்கினார். பொய்கையாழ்வாரின் ஊரும் பேரும் நூல் கொடையும் பற்றி அவர் பாடிய முதல் திருவந்தாதியில் சிறப்புப் பாயிரமாய் அமைந்திருக்கின்றது. என்பதனை,

“சைதைசேர் பூம்பொழில்சூல் கட்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து”[1]

அறியலாம். இறைவன் யாவரினும் உயர்ந்தோன்; யாவருக்கும் மேலோன்; அறப்பெரியவன், அவனுக்கு ஒப்பானது ஒரு பொருள் உலகத்தில் இல்லை. பெரியோன் திருமுன்னர்ப் பொய்கைப்பிரான் ஏற்றிய விளக்கே அவன் பெருமையைக் கூறுகின்றன. 'நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று; 'நன்மை கடலினும் பெரிது' என்பன இதற்குச் சான்றுகளாகும். இவ்வாறு பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக அமைந்த இப்பெரிய பொருள்களே, இறைவன் முன் ஏற்றப்படும் சிறு விளக்கானால் வணங்கப்படுகின்ற இறைவன் எத்துணை பெரியோனாக இருக்க வேண்டும்! என்பதனை,

“வையம் தகளியா, வார் கடலே நெய் ஆக

வெய்ய கதிரோன் விளக்கு ஆக செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே, சூட்டினேன் சொல் மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று"[2]

இவ்வாறு ஊழி முதல்வன் பெருமையை உய்த்துணரச் செய்த சிறப்பு இந்த முதல் பாசுரத்துக்கே உரியதாகிறது. முதல் இரண்டு அடிகளில் தாம் ஏற்றிய விளக்கைக் குறித்து பேசுகின்ற ஆழ்வார், பின் இரண்டு அடிகளில் அவன் திருவடிகளுக்கு அலங்காரமாகும் படி அன்போடு மாலை சூட்டுகின்றார். "சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை" என்பதனால், பாமாலை சூட்டுவதே தாம் பெற விரும்பும் பேறு" என்பதை உணர்த்துகிறார். தம் சொரூபத்துக்குத் தக்கபடி "வாயாலே அடிமை செய்யப்பெற்றேன்" என்று அருளிச் செய்கிறார். "துன்பக்கடல் வற்ற வேண்டும்"என்பதே வழிபாட்டின் நோக்கமாகும். இதனை வெளிப்படுத்தும் "இடர் ஆழி நீங்குக"என்னும் தொடர் மூன்று வகையாக பொருள் கொள்ளும்படி அமைந்துள்ளன.அவை, இதுவரையில் எம்பெருமானையே துதியாது இருந்ததனால் உண்டான வருத்தம் நீங்குவதற்காக என்றும், துதிக்கவொட்டாமல் தடையாக இருந்த பாவங்கள் தொலைவதற்காக என்றும், இந்நூலைக் கற்பதன் மூலம் இல்லறத்தாரின் துன்பம் நீங்கி வாழ்வதற்காக என்றும் பொருள் கொள்ளப்படுகின்றன.

**பொய்கைப்பிரான்**

'புற இருள்'கட்புலனாகும் கதிரவன் முதலிய பொருள்கள் யாவும் இறைவனால் படைக்கப்பட்டு அவன் ஆணைக்கு உட்பட்டு இயங்குகின்றன என்பதை, 'வையம் தகளியா' என்னும் பாசுரத்தின் மூலம் காட்டி நம் அறியாமையையும் வருத்தத்தையும் ஒருசேர நீக்கினார் பொய்கையாழ்வார். இப்படி அறியாமையை அகற்றித் தம் கவித்திறத்தால் பரம்பொருளின் உண்மையை உணரச்செய்ததன் மூலம் உலகுக்கு உபகாரம் செய்தவராகிறார் பொய்கையாழ்வார். 'பிரான்' என்பதற்கு 'உபகாரகன்', 'உதவும் இயல்புடையவன்' என பொருள் கொள்ளுதல் வைணவ மரபாகும். எனவே, 'பொய்கைப்பிரான்' 'கவிஞர் போரேறு' என்று ஒன்றுக்கொன்று பொருந்தப் புகழாரம் சூட்டினார் முதலியாண்டான். ஆழ்வார் செய்த இந்நன்றியை மறவாமையினாலே அமுதனாரும் 'எம்பொய்கைப்பிரான்' என்றே கொண்டாடினார்.

"உடம்பு எனும் மனையகத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிர் எனும் திரி மயக்கி
இடர்பாடு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே"[3]

அப்பரின் பாடல் மூலம் ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களின் பாடல்களில் வெவ்வேறு வடிவங்களில் ஒத்த அனுபவமும் கருத்தொற்றுமையும் காணக் கிடைப்பதை உணரலாம்.

**முதல் திருவந்தாதி**

பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி நூறு வெண்பாக்களைக் கொண்டது. இப்பாடல்கள் யாவும் அந்தாதி அமைப்பில் ஒன்றுக்கொன்று தொடர்ந்து நிற்கின்றன. பாடல் ஒவ்வொன்றிலும் பொய்கையாழ்வாரின் இறை அனுபவம் வெவ்வேறு உணர்வு நிலைகளில் பதிவாகியுள்ளது.

ஒவ்வொரு பாடலும் ஒரு தனி பாடலைக் கொண்டுள்ளது. ஆழ்வாருடைய மனநிலையின் வெளிப்பாடே எல்லா பாடல்களையும் இணைப்பது இறைப் பற்றாகும். பெருமாள் மீது கொண்ட காதல் பயணத்தில் நேரும் சோதனைகளும் வெற்றித் தோல்விகளும் கவிதைப் பொருள் என்கிறார். தேவர்களுக்காகப் பாற்கடல் கடைந்ததையும் மாவலிபால் மண் இரந்ததையும் நினைக்கிறார்(2) ஒரு பாசுரத்தில்' அவன் செயல் ஒன்றைக்கூட நான் மறந்தறியேன்'(6) என்கிறார் மற்றொரு பாசுரத்தில். அயல் நின்ற வல்வினைகளைக் கண்டு அஞ்சினேன்'(51) என்பார் ஓரிடத்தில், 'அந்த வினைகளுக்கு என்னிடத்தில் என்ன வேலை என்றும் அவை எவ்வாறு வரும் என்றும் பெருமிதம் கொள்வார் பிரிதோர் இடத்தில், 'அவனைக் காண்பது எளிது'(50) என்று கூறும் அவரே, 'உணர்வார் ஆர் உன் உருவம் தன்னை'(68) என்றும் வினவுவார். இப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்ட மனநிலைகளின் உணர்வு வெளிப்பாடாக அமைகிறது.

**மூர்த்தி உருவே முதல்**

பொய்கையாழ்வார் காலத்தில் பலத் தெய்வ வழிபாடு இருந்துள்ளன. அவரவர்கள் தாம் அறிந்தவகையில் சில தேவதைகளைத் தங்களுக்குக் கடவுளாகச் சொல்லிக்கொண்டு, சுவரின் மேல் அவற்றைச் சித்திரமாக வரைந்தும், சிலையாக நிறுத்தியும் வழிபட்டு வந்தனர். அந்நிலையில் திருமாலே மூல முதல்வன் என்பதைப் பின்வரும் பாசுரத்தின் மூலம் தெளிவுபடுத்துகின்றார் பொய்கையாழ்வார்.

"அவர் அவர் தாம் தாம், அறிந்தவாறு ஏத்தி
இவர் இவர் எம் பெருமான் என்று சுவர்மிசைச்
சார்த்தியும், வைத்தும் தொழுவர் உலகு அளந்த
மூர்த்தி உருவே முதல்"[4]

இதனைத் தொடர்ந்து, அடுத்த பாசுரத்தில், முதல்வனான திருமாலின் பேரருளே ஒப்புயர்வற்ற அழிவில்லாத பேரின்பத்தைத் தரவல்லது என்றும் உணர்த்துகின்றார்.

"முதல் ஆவார் மூவரே அம் மூவருள்ளும்
முதல் ஆவான், மூரி நீர் வண்ணன் முதல் ஆய
நல்லான் அருள் அல்லால், நாம நீர் வையகத்துப்
பல்லார் அருளும் பழுது"[5]

என்பது அவரின் துணிபாகும்.

**சம்பந்த ஞானம்**

"உலகப்பற்றை நீக்கிப் பட்டிமேயாதபடி மனதை அடக்கி இறைவனோடு தமக்குள்ள உறவை ஞானத்தாலே எளிதாக உணர்பவருடைய மனமானது இறைவனுடைய திருவடிகளை ஆவலுடன் சென்றடையும் என்று உலகறிந்த உவமானத்தை எடுத்துக்காட்டுகிறார் பொய்கையாழ்வார். பல்லாயிரம் பசுக்களின் கூட்டத்தில் ஒரு கன்றானது தன் தாயைக் கண்டறிவது எப்படியோ, அப்படியே இறைவனின் திருவடியை அடைவதாகும். இதற்கு அவன் தலைவன் நாம் அடிமை என்னும் சம்பந்த உணர்ச்சியே காரணமாகிறது. சம்பந்த ஞானம் இல்லாதவர்களுக்கு இறைவனை அடைதல் ஒருநாளும்

இயலாது. சம்பந்த ஞானம் உள்ளவருக்கு இறைவனை அடைவது எளிதாகும் என்பதனை,

"தெளிது ஆக, உள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்து
எளிது ஆக, நன்கு உணர்வார் சிந்தை எளிது ஆகத்
தாய் நாடு கன்றே போல், தண் துழாயான் அடிக்கே
போய் நாடிக்கொள்ளும் புரிந்து"[6]

இப்பாசுரத்தின் மூலம் ஞானம் உடையவர்கள் சாத்திரம் சொல்லுகின்ற கர்மஞான பக்திகளைக் கடைப்பிடிக்காவிட்டாலும் பரமபதம் அடையலாம் என்கிறார் பொய்கையாழ்வார். காரணம் இன்றியும் அருள் செய்யம் இயல்புடையவன் இறைவன், அக்காரணமற்ற கருணையினாலே மேல்விழும்போது நாம் செய்ய வேண்டுவது அவனை விலகாமை ஒன்றே ஆகும். மேலும் ஒரு பாசுரத்தில்,

"இமையாத கண்ணால், இருள் அகல நோக்கி
அமையாப் பொறி புலன்கள் ஐந்தும் நமையாமல்
ஆகத்து அணைப்பார், அணைவரோ, ஆயிர வாய்
நாகத்து அணையான் நகர்"[7]

'இமையாத கண்' என்பது ஞானக்கண். ஞானக்கண் திறந்தால் அஞ்ஞான இருள் அகலும், அந்நிலையில் தன் இயல்பும் சர்வேசுவரனுடைய இயல்பும் தெளிவாகத் தெரியும். அவ்வாறு தெரிந்து கொண்டதனால் 'ஆண்டான் அடிமை' உறவைப் புரிந்துக் கொண்டு அவனை நெஞ்சாலே நினைப்பவர்கள், ஐம்புலன்களை அடக்காவிடினும் வைகுந்தத்தை அடைவார். இதனால் சம்பந்த ஞானமும், இறைவனை விலகாமையும் வீடுபேற்றுக்கு வழி என்பதை உணர்த்துகிறார் பொய்கையாழ்வார்.

**புலனடக்கம்**

'இந்திரியங்களை வென்ற நல்லறிவாளர்களே இறைவனின் திருவடிகளைக் காண முடியும் என்பதை வலியுறுத்தி அதற்கான வழியும் காட்டுகிறார். 'ஐம்பொறிகளும் மதயானை போன்றவையாகும். இவ்விந்திரியங்களால் பெரும் இன்பம் யானையின் மதநீர் போன்றது. நாம் அனுபவிக்கும் சுவை, ஒளி, ஊறு, ஓசை முதலான இன்பங்கள் அவ்-யானைகள் சுற்றித் திரியும் தெருக்கலைப்போல, இந்த யானைகளுக்கு இன்பமாகிய நீரைச் சிறிது சிறிதாகக் குறைத்துப் புலன் இன்பங்களாகிய தெருக்களில் யானைகள் சுற்றித்திரியாதபடி கட்டி வைக்க வேண்டும். இவ்வாறு அவற்றைக் கட்டுப்படுத்தி, நுண்ணிய பக்திவடிவான மெய்ஞ்ஞானத்தால் அவனை அறிய வல்லவர்களே, முன்பு கஜேந்திரனைக் காத்த பெருமானின் திருவடிகளைக் கண்டு அனுபவிப்பர். மற்றவர்களால் அவ்வாறு காணுதல் இயலாது.

"வாரி சுருக்கி, மதக் களிறு ஐந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ – கூரிய
மெய்ஞ்ஞானத்தால். உணர்வார் காண்பரே மேல் ஒரு நாள்
கைந் நாகம் காத்தான் கழல்"[8]

வெண்பாவில் வெளியிடுகின்றார். மனத்தாலே தன்னை நினைத்த கஜேந்திரன் என்னும்

யானையினுடைய விரோதியைப் போக்கிக் காத்தவன் திருமால். அதுபோல் மெய்ஞ்ஞானத்தால் இறைவனை உணர்ந்தவர்கள் யாரோ, அவர்களுடைய விரோதிகளான இந்திரியம் முதலியவற்றை அழித்து அவர்களையும் காப்பான் என்னும் கருத்தில் யானையின் கதையை நினைவூட்டுகிறார் பொய்கையாழ்வார். எல்லாரையும் எளிதிற் சென்றடைவன புராணக்கதைகளாகும். சாதாரண மனிதர்களிடமும நன்கு அறிமுகமாகியுள்ள அக்கதைகளின் மூலம்- தான் சொல்ல நினைப்பதைத் துலக்கிக் காட்டுதல் அறிஞர்களின் இயல்பாகும். இவ்வகையிலேயே பொய்கையாழ்வாரின் பாசுரங்களில் அக்கதைகள் இடம்பெற்றிருப்பதை நுட்பமாக உணரலாம்.

**நெஞ்சே வாழி**

இறையடியார்கள் தம் நெஞ்சத்தை விளித்துப் பேசும் முறையில் பாசுரங்கள் புனைவது மரபாகும். இறைவன் பெருமையை நெஞ்சு அறிவுறுத்துவது போலவும், திசைமாறிச் செல்லும்போது அதனைத் திருத்தி இசைவிப்பது போலவும், இசைந்த நெஞ்சைக் கொண்டாடி வாழ்த்துவது போலவும் பல்வேறு பாசுரங்கள் அமைந்துள்ளன. முதல் திருவந்தாதியில் இருபத்தோராம் பாசுரத்தில் பொய்கையாழ்வார் முதன்முதலாக நெஞ்சை நோக்கிப் பேசத் தொடங்குகிறார். அப்பேச்சு,

"நின்று நிலம் அங்கை, நீர் ஏற்று மூவடியால்
சென்று திசை அளந்த செங்கண் மாற்கு என்றும்
படை ஆழிபுள் ஊர்தி, பாம்பு அணையான் பாதம்
அடை, ஆழி நெஞ்சே! அறி"[9]

நெஞ்சுக்கு அறிவுறுத்துவதாகவே அமைகின்றன. அதுபோல அடியார்களின் குற்றத்தையே நற்றமாகக் கொள்பவன் எம்பெருமான் என்று அவனுடைய குணத்தினை எடுத்துரைக்கின்றார் பொய்கையாழ்வார்.

"குன்று அனைய குற்றம் செய்யினும், குணம் கொள்ளும்
இன்று முதலாக என் நெஞ்சே! என்றும்
புறன் உரையே ஆயினும், பொன் ஆழிக் கையான்
திறன் உரையே சிந்தித்து இரு;"[10]

உள்ளத்தோடு பொருந்தாமல் கழுத்துக்கு மேலே சொல்லுகின்ற கபடமான சொல்லாயிருந்தாலும் அது பகவானையே பற்றினதாயின் பயன்பட்டே தீரும். பொய்ப்பேச்சையும் மெய்ப்பேச்சாக்கவல்ல பொன்னாழியன்றோ அவனோடு கூடியிருக்கிறது. அன்றியும், நண்பன் என்ற வேஷத்தோடு வந்தவனையும் நான் கைவிடமாட்டேன் என்று கூறியவன் இறைவன். எனவே நம் குற்றங்களைக் காணாக்கண் இட்டுத் தன்னுடைய கருணை வெள்ளத்தை நம்மேல் ஏறிப்பாய விடுவான். எனவே, நெஞ்சமே, நீ அஞ்சவேண்டியதில்லை என்கிறார் பொய்கையாழ்வார். இவ்ஆழ்வாரின் உபதேசத்திற்கு உடன்பட்டதும் தம் நெஞ்சை நோக்கி, 'உனக்கு நன்மையுண்டாகட்டும்' என்று வாழ்த்துகிறார்.

"தொழுது மலர் கொண்டு, தூபம் கை ஏந்தி
எழுதும் எழு வாழி நெஞ்சே பழுது இன்றி
மந்திரங்கள் கற்பனவும், மால் அடியே கைதொழுவான்

அந்தரம் ஒன்று இல்லை அடை"[11]

என்ற பாசுரம், திருவாய்மொழியின் தொடக்கத்திலேயே நம்மாழ்வார், துயர்அறு சுடர்அடி தொழுதுஎழு என்மனமே என்று நம் நெஞ்சுக்குக் கூறிய அறிவுரையை எடுத்துரைக்கிறார். நெஞ்சினை நோக்கிக் கெஞ்சுகிறார். 'பால் குடிக்கக் கால் பிடிப்பாரைப் போலே, 'அவனிடத்துக் கொண்ட அன்பினை மட்டும் விட்டுவிடாதே" என்பதனை,

"நன்று பிணி மூப்புக், கையகற்றி நான்கு ஊளி
நின்று நிலம் முழுதும் ஆண்டாலும் என்றும்
விடல் ஆழி நெஞ்சமே! வேண்டினேன் கண்டாய்
அடல் ஆழி கொண்டான் மாட்டு அன்பு"[12]

இப்படி நெஞ்சை நோக்கிப் பாசுரத்தின் மூலம் உணர்த்துகிறார். நம் உள்ளத்தில் உறைவதற்காகவே பெருமாள் திருப்பாற்கடலிலும், திருவேங்கடத்திலும் வந்து தங்கினான் என்றும், பல திவ்வியத் தேசங்களில் பெருமாள் நின்றும், இருந்தும், கிடந்தும் படாதன பட்டதெல்லாம் விலகாதார் நெஞ்சில் புகுவதற்காகவே என்றும், அத்தகைய பெருமான் இன்று வந்து நம் நெஞ்சம் நிறைய புகுந்தான். ஆதலின் அவனை நீ நினைப்பாயாக என்கிறார் பொய்கையாழ்வார். 'நமக்கு எட்டாக் கனியாய் இருப்பவன் அல்லன் இறைவன், எல்லோருக்கும் எளியனாய், தானே வந்து நம் நெஞ்சிலே தங்கியிருக்கிறான்.

**நெறிவாசல்**

பொய்கையாழ்வாருடைய முதல் திருவந்தாதியில் நான்காம் பாசுரத்தில் ' நெறிவாசல் தானேயாய் நின்றானை' என்று இறைவனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இதனையே இறைவனுக்குச் சூட்டிய திருநாமமாகவும் கருதலாம். 'நெறி' என்பது ஒன்றை அடைவதற்கான வழி, உபாயம் 'வாசல்' என்பது புகுமிடத்தைக் குறிப்பதாகிய அதன்வழிச் சென்றடையும் பேற்றினைக் குறிக்கிறது. வீடுபேறு அடைய ஒவ்வொருவரும் வெவ்வேறு வழிகளைக் கடைப்பிடிப்பர். உபாயம் இன்றி உபேயம் இல்லை. பொதுவாக வழி வேறாகவும், பயன்வேறாகவும் அமைவதே உலகில் காணப்படும் நிலையாகும். ஆனால் பரம்பொருளான திருமால் ஒருவனே உபாயமும், உபேயமுமாக உள்ளான். இறைவனை அடைவதற்கு அவனே உபாயம். எம்பெருமானுக்குச் சிறப்பாகச் சொல்லத்தக்க இலக்கணம் என்னவென்றால் 'தானே ஆறாகவும், பேறாகவும் இருப்பதுவே எனலாம். இப்படி இரண்டுமே ஒன்றாய் இருக்கக்கூடிய வேறொரு பொருளை உலகிற் காண இயலாது. எனவேதான் "நெறிவாசல் தானேயாய் நின்றானை" என்று அவனுக்குரிய திருநாமமாகவே அமைத்துக் காட்டினார் பொய்கையாழ்வார்.

**ஒருவனையே நோக்கும் உணர்வு**

கல்வியின் பயன் வாலறிவனான கடவுளை வணங்குதலே உண்மைஞானம் எனப்படும். இதைத்தவிர வேறு எத்தனைப் பெரிய வித்தைகள் கற்றபோதும், அது உண்மை ஞானமாகாது. இதனை,

"பெயரும் கருங் கடலே, நோக்கும் ஆறு ஒண் பூ

உயரும் கதிரவனே நோக்கும் – உயிரும்
தருமனையே நோக்கும், ஒண் தமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் – உணர்வு”[12]

பொய்கையாழ்வார் பாசுரம் வலியுறுத்துகிறது. ஆறுகளெல்லாம் புறநிற்கமாட்டாமல் கடலையே நோக்கிச் செல்லும், தாமரைப்பூ வானில் உள்ள சூரியனையே நோக்கி மலரும், உயிர்கள் எமதர்மனையே பூமகள் கேள்வனாகிய திருமால் ஒருவனையே பற்றி நிற்கும். வேறொன்றைப் பற்றாது என்பது இப்பாசுரத்தின் பொருளாகும். ஒருவனையே நோக்கிய ஞானத்தால் அவருக்குண்டான உறுதிப்பாடாகும். அந்த ஞானம் முதிர்ந்த நிலையில் பிறந்த நம்பிக்கை, கலங்காமை, கவலையின்மை போன்றவற்றை கீழ்க்காணும் பாசுரத்தின் மூலம் வெளியிடுகின்றார் பொய்கையாழ்வார்.

“நாடிலும் நின் அடியே நாடுவன் நாள்தோறும்
பாடிலும், நின் புகழே பாடுவன் சூடிலும்
பொன் ஆழி ஏந்தினான், பொன் அடியே சூடுவேற்கு
என் ஆகில் என்னே எனக்கு”[13]

மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களாலும் அவனையே பயனாகக் கொண்ட எனக்கு எந்தக் கவலையும் இல்லை’என்கிறார்.இவ்வாறு ஆழ்வார் பாசுரங்களைத் தொடர்புபடுத்தி நோக்கினால் தான் திருமாலைப் பரம்பொருளாகக் காட்டும் அவரது முயற்சி அறிவுப் பூர்வமானது என்பதை நம்மால் உணரமுடிகிறது.

**அடைதல் எளிது**

இறைவனை அடைதல் எளிது, ஆராதித்தல் அதனினும் எளிது என்னும் கொள்கையுடையவர் பொய்கையாழ்வார். ‘திருமாலை உங்களுக்கு ஏற்றமுறையில், இயன்ற வகையில் வழிபடலாம்’ என்கிறார்.

“சொல்லும் தனையும், தொழுமின் விழும் உடம்பு
செல்லும் தனையும் திருமாலை நல் இதழ்த் ‘
தாமத்தால் வேள்வியால், தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று”[14]

“சொல்வதற்குச் சக்தியுள்ள காலத்திலேயே திருமாலை தொழுவீர். அழிவதே இயல்பாக கொண்ட இவ்வுடம்பு இருக்கும் வரையில் தொழுவீர். அழகிய பூவிதழ்களைக் கொண்ட மாலையாலாவது, வேள்வியாலாவது, கிரியைகளாலாவது, மந்திரத்தாலாவது, நாமத்தாலாவது, பெருமானைத் துதிப்பீர்களாகில் நன்மை பெறுவீர்” என்பது பாசுரத்தின் பின்னிரண்டு அடிகளில், தாமத்தால், வேள்வியால் தந்திரத்தால், மந்திரத்தால் வழிபடுங்கள் என்று ஆழ்வார் கூறியதன் நோக்கம், இவை அனைத்தையும் ஒருசேரச் செய்ய வேண்டும், ஒருவனே செய்யவேண்டும்’ என்னும் கருத்தில் அன்று, இங்கு கூறியவற்றுள் அவரவர்க்கு இயன்ற வழியைப் பின்பற்றி அவனை வழிபடலாம் என்பதை ஆழ்வாரின் கருத்தாகும். வழிபடுவதைக் கடினம் என்று எண்ணுகிறவர்களுக்கு மிகச் சுலபமான வழியினைக் கூறுகிறார். வெறும் வாயினால் திருநாமங்களைச் சொல்லியே பயன் பெறலாம்

என்கிறார். அவர் தாமே,

"அயல் நின்ற வல் வினையை, அஞ்சினேன் அஞ்சி
உய நின் திருவடியே சேர்வான் நயம் நின்ற
நல் மாலை கொண்டு, நமோ நாரணா என்னும்
சொல் மாலை கற்றேன் தொழுது"[15]

என்று தம் அனுபவத்தை வெளியிடக் காண்கிறோம்.

ஐம்புலன்களும் எவ்வாறு இறைவன் நாமத்தை துய்க்கவேண்டும் எனவும், அவன்தாள் தொழுதால் வினைகள் அண்டாது என்பதும், முதன்மையானவன் என்றும் முதலானவன் அவனையே ஆட்கொள்வோம் என்பதாகவும், உலகப்பற்றை நீக்கி மனம் முழுவதும் அவனாகவே தியானிக்கும் நிலையில் இந்திரியங்களை வென்று பெருமானின் திருவடிக்கே என்பதாக அவன் திருவந்தாதியைப் பாடி நெஞ்சம் மகிழ்ந்து பொய்கைப்பேச்சும் மெய்ப்பேச்சாக உள்ளதை இத்திருவந்தாதியில் காணமுடிகின்றது.

**மேற்கோள்கள்**

1. முதல் திருவந்தாதி, சிறப்புப் பாயிரம்
2. முதல் திருவந்தாதி, பா-1
3. நான்காம் திருமுறை, பதிகம்-75, பா-4
4. முதல் திருவந்தாதி, பா-14
5. முதல் திருவந்தாதி, பா-15
6. முதல் திருவந்தாதி, பா-30
7. முதல் திருவந்தாதி, பா-32
8. முதல் திருவந்தாதி, பா-47
9. முதல் திருவந்தாதி, பா-21
10. முதல் திருவந்தாதி, பா- 41
11. முதல் திருவந்தாதி, பா-58
12. முதல் திருவந்தாதி, பா- 71
13. முதல் திருவந்தாதி, பா-67
14. முதல் திருவந்தாதி, பா-88
15. முதல் திருவந்தாதி, பா-57

**துணைநூற் பட்டியல்**

1. கோவேந்தன்.த, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (மூலமும் எளிய உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை.14, முதற்பதிப்பு-2015,
2. வெள்ளைவாரணன். க, பன்னிரு திருமுறை வரலாறு இரண்டு பாகங்களும், சாரதா பதிப்பகம் சென்னை-14, முதற்பதிப்பு -2008